

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (1.1.2026) ஆங்கிலப் புத்தாண்டு தினத்தையொட்டி சென்னை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, சட்டமன்ற உறுப்பினர் வி. ஜி. ராஜேந்திரன் ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (1.1.2026) ஆங்கில புத்தாண்டு தினத்தையொட்டி சென்னை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, சட்டமன்ற உறுப்பினர் வி. ஜி. ராஜேந்திரன் ஆகியோர் உள்ளனர்.

### தமிழ்நாட்டில் 2026 தேர்தலில்

# தி.மு.க.வுக்கு எந்த ஒரு வலுவான போட்டியாளரும் இல்லை!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ‘டைம்ஸ் ஆஃப் இந்தியா’ ஆங்கில நாளேட்டிற்கு பேட்டி!

**சென்னை,ஜன.2-**

**தி.மு.க. இளைஞரணிச் செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின், ‘டைம்ஸ் ஆஃப் இந்தியா’ ஆங்கில நாளேட்டுக்கு அளித்துள்ள நேர்காணல் வருமாறு:-**

முத்தமிழறிஞர் கலைஞரின் தனித்துவமான பலமே, அவரது அசைக்க முடியாத போராட்டக் குணம்தான் என்றும், பல சோதனையான காலகட்டத்திலும், முத்தமிழறிஞர் கலைஞர் தனது கொள்கையில் இருந்து மாறாதவர் என்றும் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலினின் குறிப்பிடத் தக்க குணம் அவரது கடின உழைப்பு தான் எனக் குறிப்பிட்ட உதயநிதி ஸ்டாலின், ஒவ்வொரு நாளும், மாநிலத்தின் முதலமைச்சராகவும்,



தி.மு.க.வின் தலைவராகவும் நூறு சதவீத உழைப்பை வழங்குகிறார் என பெருமிதம் தெரிவித்துள்ளார்.

தி.மு.க. தனது கூட்டணிக் கட்சிகளின் கருத்துகளுக்கு மதிப்பளிப்பதாகவும், கொள்கையால் பிணைக்கப் பட்டுள்ளதாகவும் உதயநிதி ஸ்டாலின் கூறியுள்ளார்.

அ.தி.மு.க. பலவீனமாக இருந்தாலும், அதுவே எதிர்க்கட்சி என்றும், 2026 தேர்தலில் பா.ஜ.க. மற்றும் அதன் “பி” டீம்களையும் எதிர்கொள்வோம் எனத் தெரிவித்துள்ள துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தமிழ்நாட்டில் 2026 தேர்தலில் தி.மு.க.வுக்கு எந்த ஒரு வலுவான போட்டியாளரும் இல்லை என்று ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ நாளேட்டிற்கு பேட்டியளித்துள்ளார்.

# வர்த்தக சிலிண்டர் விலை ரூ.110 உயர்ந்து, ரூ.1,849.50ஆக நிர்ணயம்!

## புத்தாண்டின் முதல் நாளிலேயே அதிர்ச்சி அளித்த எண்ணெய் நிறுவனங்கள்!

புதுடெல்லி, ஜன.2–

வர்த்தக பயன்பாட்டிற்கான சமையல் எரிவாயு சிலிண்டர் விலை 110 ரூபாய் உயர்ந்து, ஆயிரத்து 849 ரூபாய் 50 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெயின் விலையின் அடிப்படையில், சமையல் எரிவாயு சிலிண்டர் விலையைஎண்ணெய் நிறுவனங்கள் மாதம்தோறும் நிர்ணயம் செய்கின்றன. அதன்படி, 2026ஆம் ஆண்டின் முதல் நாளான நேற்று வணிக பயன்பாட்டிற்கான சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 110 ரூபாய் அதிரடியாக உயர்த்தப்பட்டுள்ளது. 19 கிலோ எடை கொண்ட வணிக பயன்பாட்டுக்கான சிலிண்டர் விலை ரூபாய் 110 உயர்ந்து, ஆயிரத்து 849 ரூபாய் 50 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதே வேளையில், 14.2 கிலோ எடை கொண்ட வீட்டு உபயோக சமையல் எரிவாயு விலையில் எவ்வித மாற்றமும் இன்றி 868 ரூபாய், 50 காசுகளுக்கு விற்பனையாகிறது.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# “அன்னம் தரும் அமுதகரம்” 315வது நாள்!

## துறைமுகம் தொகுதியில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!

*சென்னை, ஜன.2-*

*தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 316 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (01.01.2026), துறைமுகம் தொகுதி: 1) துறைமுகம் மேற்கு பகுதி, வட்டம் 57 அ, ஆதியப்பன் தெரு கோவிந்தப்பன் தெரு, வட்ட செயலாளர் பா. அண்ணாதுரை. 2) துறைமுகம் கிழக்கு பகுதி: வட்டம் 55அ, அம்மன் கோயில் தெரு சடையப்பன் தெரு சந்திப்பு, சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்.*



*இந்நிகழ்ச்சியில் எஸ். முரளி, எஸ்.இராஜசேகர், இசட்.ஆசாத், பி.ஶ்ரீராமுலு, ஜி.எம்.தேவன், எம்.விஜயகுமார், என்.பி.எம்.ஷேக்அப்துல்லா, இப்ராஹிம்கனி, ஆர்.கலைச்செல்வி, P.விஜயகுமார், எல்.சம்பத்குமார், பா.பிரதாப்குமார், எம். விநாயகம், ப.ஜெகதீஷ் துறைமுகம் கிழக்கு / மேற்கு வட்ட கழக செயலாளர்கள்: எல்.சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.எ.அஸ்லாம், டி.கதிரவன் (எ) ராஜா, எம்.பரத்குமார், கே.கவியரசு, ஆ. நா.பார்த்திபன், எம்.ஜெய்சங்கர், பா.கதிரவன், ஆர். இரவிச்சந்திரன், ஜி.ராமமூர்த்தி, பா.அண்ணாதுரை, டி. சதிஷ்குமார், வே.பா.பிரபாகரன், லண்டன் க. முருகன். ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ்.முரளி, பெரம்பூர் ஆர்.ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப் குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.*







தமிழர் திருநாளாம்
தைத் திருநாளில் சிந்தனைக்கு
விருந்து படைக்க தயாராகிறது
முரசொலி
பொங்கல் மலர்
2026
ஜனவரித் திங்கள்
15ஆம் நாள் வெளிவருகிறது.
முன் பதிவிற்கு முந்துங்கள்...
விலை ரூ.150/-